**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**எம்.சி.ஓ.பி.எண் 266/2022**
**நாள் 11/03/2025 செவ்வாய்க்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – ஹரி | த/பெயர் – ஜெனார்த்தன் |
| வயது – 33 | தொழில் – |
| விலாசம் – அரூர் கிராமம், சத்தியவேடு | |

**முதல் விசாரணை–**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் ஏற்படுத்தப்பட்ட விபத்துக்கு 1 மற்றும் 2 ஆம் எதிர்மனுதாரர்களிடமிருந்து இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கு குறித்த விவரங்கள் அனைத்தும் பிரமான வாக்குமூலத்தின் வாயிலாக ஏற்க்கெனவே கூறியுள்ளேன். மேலும், என் தரப்பு சான்றாவணமாக தொடர் சிகிச்சை ஆவணங்கள் ம.சா ஆ 12 மற்றும் 15.03.2022 தேதியிட்ட மருத்துவ விடுவிப்பு அறிக்கை ம.சா ஆ 13 ஆகவும் குறியீடு செய்ய வேண்டுகிறேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

மாதர்பாக்கத்தில் இருந்து ராளகுப்பம் நோக்கி வந்துக்கொண்டிருந்தபோது பல்லடம் கிராமம் அருகே விபத்து நடந்தது. விபத்தின் போது நான் TN18 J 6568 என்ற இருசக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தேன். அப்போது எதிரே வந்த மினி லாரி என் மீது

மோதி விபத்து ஏற்ப்படுத்தியது. முதல் உதவி சிகிச்சை ஸ்ரீசிட்டியில் உள்ள காவேரி மருத்துவமனையிலும் மேற் சிகிச்சை ஸ்டேன்லி மருத்துவமனையில் எடுத்துக்கொண்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா ஆ 5 மருத்துவ சான்றானது நான் ஸ்டேன்லி மருத்துவமனையில் 01.02.2022 அன்று சிகிச்சை பெற்றதற்காக வழங்கப்பட்டது. மேற்படி பதிவேட்டில் இருசக்கர வாகனம் மோதி கீழே விழுந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அவ்வாறு விபத்து நடக்கவில்லை. எதிரே வந்த வாகனம் மோதி தான் விபத்து ஏற்ப்பட்டது. எனக்கு வலது பக்க காலில் முட்டிக்கு கீழேயும் மேற்பகுதியிலும் எலும்பு முறிவு ஏற்ப்பட்டது. எனக்கு 4 முறை அறுவை சிகிச்சை செய்தனர். நான் 22.02.2022 ல் மருத்துவ மனையில் இருந்து விடுவிப்பு செய்யப்பட்டேன். அதன் பிறகும் இரண்டு முறை மருத்துவமனையில் சேர்ந்தேன். மீண்டும் மருத்துவமனையில் சேர்ந்து 15.03.22 முதல் 29.03.2022 விடுவிக்கப்பட்டேன். பின்னர் 19.04.2022 முதல் 25.04.2022 வரை மேற்படி அதே மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். விபத்து ஏற்ப்படுத்திய மினி லாரியின் பதிவு எண் TN 18 AW 8809 ஆகும். மேற்படி விபத்து ஏற்ப்படுத்தியதாக கூறப்படும் வாகனம் 1ம் எதிர்மனுதாரருடையது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வாகனத்தை 1ம் எதிர்மனுதாரரின் கணவர் சுகுமார் தான் விபத்தின் போது ஓட்டினார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த விபத்து குறித்து எனது தம்பி ராமு என்பவர் புகாா் கொடுத்தார். விபத்து நடந்து 15 நாட்கள் பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த விபத்தானது எனது அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் ஏற்ப்பட்டது என்றாலும் நான் தான் எனது வாகனத்தை ஓட்ட தெரியாமல் ஓட்டி

விபத்தை ஏற்ப்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் ரூபாய் 10 லட்சம் இழப்பீடு கோரியுள்ளேன். நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் அதிகபடியான நஷ்ட ஈடு கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த விபத்து சம்மந்தமாக விபத்து ஏற்ப்படுத்திய நபருக்கு எதிராக வேறு எந்த நீதிமன்றத்திலும் சாட்சியம் அளிக்கவில்லை. தவறு என் மீது உள்ளதால் 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**